**செய்தி வெளியீடு எண்: 07/2022** **நாள்: 24.02.2022**

**பத்திரிக்கை செய்தி**

## உடல் உறுப்பு தானத்தை ஊக்குவிப்பதற்காக இணையவழியில் ரங்கோலி போட்டி நடைபெறுகிறது

இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழாவின் (Azadi ka Amrut Mahostav) ஒரு பகுதியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மோகன் அறக்கட்டளையுடன் இணைந்து இணையவழியில் ரங்கோலி போட்டியை நடத்தவுள்ளது.

மேற்கண்ட போட்டி உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த நடத்தப்படுகிறது. இந்தப் போட்டி உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதோடு மட்டும் அல்லாமல் உறுப்பு தானம் செய்தோரை அங்கீகரிக்கவும் உள்ளது.

இப்போட்டியின் கருப்பொருள் “அழியாத கோலங்கள்”, இது உடல் உறுப்பு தானத்தை ஊக்குவிக்கும் வகையில் ரங்கோலி, கோலம் மற்றும் பூக்களால் ஆன பூக்கோலம் இருக்கலாம்.

**இணையவழியில் பதிவு செய்ய:**

ரங்கோலி போட்டி - பதிவு செய்ய கடைசி தேதி – 01.03.2022
ரங்கோலி - சமர்ப்பிக்கும் கடைசி தேதி – 03.03.2022
போட்டி முடிவு அறிவிப்பு – 10.03.2022

மேற்கூறிய போட்டியில் பங்குப்பெற விருப்பம் உள்ளவர்கள், https://www.mohanfoundation.org/rangoli-competition-register.asp இணைப்பை கிளிக் செய்யவும்.

மோகன் அறக்கட்டளையின் பயற்சி பெற்ற உறுப்பு மாற்று ஒருங்கிணைப்பாளர்கள் உடல் உறுப்பு மற்றும் திசு நன்கொடைகள் மூலம் 8,000-க்கும் மேற்பட்ட உயிர்களை காப்பாற்றத் தூண்டுசக்தியாக இருந்துள்ளனர். புதிய வாழ்வைப் பெற்றவர்கள் வாழ்க்கையை கொண்டாடவும், தங்கள் உறுப்புகளை தானம் செய்தவர்களை அங்கீகரிக்கவும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் மோகன் அறக்கட்டளை இணைந்து இந்த ரங்கோலி போட்டியை நடத்துகிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**